உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

அகத்தியமகாமுனிவர்

திரட்டியருளிய

தேவாரத்திரட்டு.

இஃது,

சமிவனக்ஷேத்திரமென்னுங்

கோயிலூர்

அ. இராமசுவாமியவர்களால்

பலருடைய வேண்டுகோளின்படி

கோயிலூர்ப் பிரதிமுதலிய பல பிரதிரூபங்களைக்கொண்டு

பிழையறப்பரிசோதித்து,

சென்னை:

வே. நா. ஜூபிலி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை ரூபா ௧௲.

சர்வதாரிஸு வைகாசிமீ.

1888.

உ

சூசீபத்திரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருநாவுக்கரசுநாயனார்.

சுந்தரமூர்த்திநாயனார்.

திருச்சிற்றம்பலம்.

வரலாறு.

அநாதி முத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபெருமானே என்று ஆன்மாக்கள் துணிந்து வழிபட்டு உய்யும்பொருட்டுப் பல அற்புதங்களினாலே சைவசமயத்தைத் தாபித்தருளிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் என்னும் சமயாசாரியர்கள் மூவரால் அருளிச்செய்யப்பட்ட தமிழ் வேதமாகிய தேவாரம் ஒரு லக்ஷத்திரண்டாயிரந் திருப்பதிகமுடையது. அவைகளுள் எழுநூற்றுத்தொண்ணூற்றேழு திருப்பதிகம் ஒழித்து ஒழிந்தவை இறந்துபோயின. எஞ்சி நின்ற எழுநூற்றுத்தொண்ணூற்றேழு திருப்பதிகங்களையும் திருவாரூர் அபயகுலசோழமகாராஜாவுடைய வேண்டுகோளின்படி திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார்நம்பி எழுதிருமுறைகளாக வகுத்தருளினார். அவ்வேழும் அடங்கிய திருமுறை அடங்கன்முறையெனப்படும்.

கல்வியறிவொழுக்கங்களாற் சிறப்புற்று விளங்கிய சிவாலயமுனிவர் அவ்வடங்கன்முறையினது மகிமையையும் அதனை நாடோறும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ்செய்யின் முக்தி சித்திக்குமென்பதனையும் அறிந்து, தாம் அப்படிப் பாராயணஞ்செய்ய ஆசைகொண்டார். அது நிறைவேறுதல் கூடாமையால் வருத்தமுற்று, சிதம்பரத்தை அடைந்து, கனகசபையின்கண்ணே ஆனந்ததாண்டவஞ்செய்தருளும் சபாநாதரை வணங்கி, தமது கருத்து முற்றும்பொருட்டு நெடுங்காலம் அருந்தவஞ்செய்தார். அப்பொழுது சபாநாதருடைய திரு

வருளினாலே, "சிவாலயமுனிவனே, நீ பொதியமலையி லிருக்கின்ற அகத்திய முனிவனிடத்தே போவாயாயின் உன்கருத்து நிறைவேறும்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. அது கேட்ட சிவாலயமுனிவர் மன மகிழ்ந்து, சபாநாதரை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு சென்று, பொதியமலையை அடைந்து, அகத்தியமகா முனிவரைச்சிந்தித்து, மூன்றுவருஷகாலம் அருந்தவஞ் செய்தார். அகத்தியமகாமுனிவர் அவருக்கு வெளிப் பட்டு, அடங்கன்முறை முழுதையும் அவருக்குபதேசித்து, அதினின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத் திரட்டி, "இவைகளை நாடோறும் பாராயணஞ்செய்பவர் கள் அடங்கன்முறை முழுதையும் பாராயணஞ்செய்பவர்க ளாவர்கள்" என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினர். சிவாலயமுனிவர் அப்படியே இவ்விருபத்தைந்து திருப் பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ் செய்து சிவ பெருமானுடைய திருவருளைப்பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

அகத்தியமகாமுனிவர்

திரட்டியருளிய

தேவாரத்திரட்டு.

தேவாரநுதலியபொருள்.

நேரிசைவெண்பா.

குருவுருவும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயி
லானுருவ மென்றலைமே லாக்குந் - திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயர்க்கென்
றிட்டா ரகத்தியனா ரெட்டு.

திருப்பதிகக்கருத்துரை.

நிலைமண்டலவாசிரியப்பா.

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகு
நீற்றுப் பதிக நிகழ்த்துங் காலை
மாற்றுப் பறையின் வரலா றாகுந்
துஞ்சல் காதல் சொற்றுணை மற்று
மஞ்செழுத் துண்மை யருளிய தாகு
மாரூர் தில்லை காட்டூர் மூன்றுஞ்
சீரார் கோயிற் றிறமைய தாகு
மோருரு வரிய பாளை வடிவே
மருவா ரென்ற வண்டமி ழைந்துந்

திருவார் மேனிச் செய்திய தாகும்
பொடியுடை யரவணை யந்த ணாள
னடியிணை தந்த வருளே யாகும்
பந்து வேற்று கொன்றிவை மூன்று
நந்தலி லருச்சனை நாட்டிய தாகும்
வேய் குலங் தில்லை யெனுமிவை மூன்று
நாயனு மடிமையு நாட்டிய தாகு
மிப்பரி சகத்திய முனிவ னிருநிலத்
தொப்பரு மூவ ரோதுதே வார
முழுதையுஞ் சிவாலய முனிக்கறி வித்துப்
பழுதிலா வவையுட் பரிந்தெடுத் திருபத்
தைந்துயர் பதிகமு மறிவுறத் திரட்டி
யெண்ணரு மடங்க லியாவையு முணரும்
புண்ணிய மிவைகொடு பொருந்து மென்றவன்
றனக்கருள் செய்தனன் றகவுற வதனாற்
றீதிலா வகத்தியத் திரட்டினை யுலகி
லோதின ரடங்கலு மோதின ராவரே.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருப்பிரமபுரம்.

பண் நட்டபாடை.

குருவருள்.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௧)

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௨)

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
யேர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௩)

விண்மகிழ்ந்தமதிலெய்ததுமன்றிவிளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௪)

ஒருமைபெண்மையுடையன்சடையன்விடையூருமிவனென்ன
வருமையாகவுரைசெய்யவமர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௫)

மறைகலந்தவொலிபாடலோடாடலராகிமழுவேந்தி
யிறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடியார்பொழினீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௬)

சடைமுயங்குபுனலன்னனலன்னெரிவீசிச்சதிர்வெய்த
வுடைமுயங்குமரவோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழிசூழ்குளிர்கானலம்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (எ)

வியரிலங்குவரையுந்தியதோள்களைவீரம்விளைவித்த
வுயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்கும்முலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (அ)

தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானு
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மகளீர்முதலாகியவையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௯)

புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோர்மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௧௦)

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்

திருவதிகைவீரட்டானம்.

பண் கொல்லி.

திருவருள்.

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்
  கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்
  பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியே
  குடரோடுதுடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடில
  வீரட்டானத்துறையம்மானே. (௧)

நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தே
னினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பதுகண்டறியேன்
வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னைநலிவதனை
நணுகாமற்றுரந்துகரந்துமிடீ
ரஞ்சேலுமென்னீரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௨)

பணிந்தாரனபாவங்கள்பாற்றவல்லீர்
படுவெண்டலையிற்பலிகொண்டுழல்வீர்
துணிந்தேயுமக்காட்செய்துவாழலுற்றாற்
சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடிகொண்டுமெய்பூசவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர்சுற்றும்வெண்டலைகொண்
டணிந்தீரடிகேளதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௩)

முன்னம்மடியேனறியாமையினான்
முனிந்தென்னைநலிந்துமுடக்கியிடப்
பின்னையடியேனுமக்காளும்பட்டேன்
சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றோ
தலையாயவர்தங்கடனாவதுதா
னன்னநடையாரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௪)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற்
கரைநின்றவர்கண்டுகொளென்றுசொல்லி
நீத்தாயகயம்புகநூக்கியிட
நிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறியேன்
வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன்
வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
வார்த்தார்புனலாரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௫)

சலம்பூவொடுதூபமறந்தறியேன்
றமிழோடிசைபாடன்மறந்தறியே
னலந்தீங்கிலுமுன்னைமறந்தறியே
னுன்னாமமென்னாவின்மறந்தறியே

னுலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வா
யுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளா
யலந்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௬)

உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளு
மொருவர்தலைகாவலிலாமையினால்
வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றால்
வலிக்கின்றதுசூலைதவிர்த்தருளீர்
பயந்தேயென்வயிற்றினகம்படியே
பறித்துப்புரட்டியறுத்தீர்த்திடநா
னயர்ந்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௭)

வலித்தேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனமொன்றுமிலாமையினாற்
சலித்தாலொருவர்துணையாருமில்லைச்
சங்கவெண்குழைக்காதுடையெம்பெருமான்
கலித்தேயென்வயிற்றினகம்படியே
கலக்கிமலக்கிட்டுக்கவர்ந்துதின்ன
அலுத்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௮)

பொன்போலமிளிர்வதொர்மேனியினீர்
புரிபுன்சடையீர்மெலியும்பிறையீர்
துன்பேகவலைபிணியென்றிவற்றை
நணுகாமற்றுரந்துகரந்துமிடீ
ரென்போலிகளும்மையினித்தெளியா
ரடியார்படுவதிதுவேயாகி
லன்பேயமையுமதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௯)

போர்த்தாயங்கொரானையினீருரிதோல்
புறங்காடரங்காநடமாடவல்லா
யார்த்தானரக்கன்றனைமால்வரைக்கீ
ழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தா
லென்வேதனையானவிலக்கியிடா
யார்த்தார்புனல்சூழதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

திருவெண்ணெய்நல்லூர்.

பண் இந்தளம்.

குருவருள்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (க)

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (உ)

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரம்மேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. (ங)

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்தீ
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளடிகேளுனக்காளாயினியல்லேனெனலாமே. (ச)

பாதம்பணிவார்கள்பெறுபண்டம்மதுபணியா
யாதன்பொருளானேனறிவில்லேனருளாளா
தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாதீயுனக்காளாயினியல்லேனெனலாமே. (ரு)

தண்ணார்மதிசூடிதழல்போலுந்திருமேனி
யெண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தாய்
மண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (சு)

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளானாயுனக்காளாயினியல்லேனெனலாமே. (எ)

ஏற்றூர்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித்திரிவேனோசெக்கர்வானீ
ரேற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாற்றாயுனக்காளாயினியல்லேனெனலாமே. (அ)

மழுவாள்வலனேந்திமறையோதிமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (கூ)

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
திருவாலவாய்த்திருநீற்றுப்பதிகம்.

பண் காந்தாரம்.

பரையின்வரலாறு.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிரு வாலவாயான்றிருநீறே. (க)

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிரு வாலவாயான்றிருநீறே. (உ)

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிரு வாலவாயான்றிருநீறே. (ந)

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே. (ச)

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறு வந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிரு வாலவாயான்றிருநீறே. (ரு)

அருத்தமதாவதுநீறு வவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே. (சு)

எயிலதுவட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத் தாலவாயான்றிருநீறே. (எ)

இராவணன்மேலதுநீறு வெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனி யாலவாயான்றிருநீறே. (அ)

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
வாலமதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே. (கூ)

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான்றிருநீறே. (க0)

ஆற்றலடல்விடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்
பஞ்சாக்கரத்திருப்பதிகம்.

பண் காந்தாரபஞ்சமம்.

அஞ்செழுந்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினு
நெஞ்சகநைந்துநினைமினுநாடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே. (௧)

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே. (௨)

ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினையேற்றிநன்புலத்
தேனைவழிதிறந்தேத்துவார்க்கிட
ரானகெடுப்பனவஞ்செழுத்துமே. (௩)

நல்லவர்தீயரெனுதுநச்சினர்
செல்லல்கெடச்சிவமுத்திகாட்டுவ
கொல்லநமன்றமர்கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பனவஞ்செழுத்துமே. (௪)

கொங்கலர்வன்மதன்வாளியைந்தகத்
தங்குளபூதமுமஞ்சவைம்பொழிற்
றங்கரவின்படமஞ்சுந்தம்முடை
யங்கையிலைவிரலஞ்செழுத்துமே. (௫)

தும்மலிருமறொடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம்விளைந்தபோழ்தினு
மிம்மைவினையடர்த்தெய்தும்போழ்தினு
மம்மையினுந்துணையஞ்செழுத்துமே. (௬)

வீடுபிறப்பையறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பனபின்னைநாடொறு
மாடுகொடுப்பனமன்னுமாநட
மாடியுகப்பனவஞ்செழுத்துமே. (௭)

வண்டமரோதிமடந்தைபேணின
பண்டையிராவணன்பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டுதுதித்தபின்னவர்க்
கண்டமளிப்பனவஞ்செழுத்துமே. (அ)

கார்வணனான்முகன்காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடிசெவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப்பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவனவஞ்செழுத்துமே. (கூ)

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே. (க0)

நற்றமிழ்ஞானசம்பந்தனன்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
வற்றமின்மாலையீரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவரும்பராவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

நமச்சிவாயத்திருப்பதிகம்.

பண் கௌசிகம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி
யோதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினுமெய்ப்பொருளாவது
நாதனாமநமச்சிவாயவே. (க)

நம்புவார்நமர்நாவினவிற்றினல்
வம்புநாண்மலர்வார்மதுவொப்பது
செம்பொனார்திலகம்முலகுக்கெலா
நம்பனாமநமச்சிவாயவே. (உ)

நெக்குளார்வமிகப்பெருகிநினை
தக்குமாலைகொடங்கையிலெண்ணுவார்

தக்கவானவராய்த்தகுவிப்பது
நக்கனுமநமச்சிவாயவே. (௩)

இயமன்றூதருமஞ்சுவரின்சொலா
னயம்வந்தோதவல்லார்தமைநண்ணிறு
னியமந்தானினைவார்க்கினியானெற்றி
நயனனுமநமச்சிவாயவே. (௪)

கொல்வாரேனுங்குணம்பலநன்மைக
ளில்லாரேனுமியம்புவராயிடி
னெல்லாத்திங்கையுநீங்குவரென்பரா
னல்லார்நாமநமச்சிவாயவே. (௫)

மந்தாம்மனபாவங்கண்மேவிய
பந்தனையவர்தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமா
னந்திநாமநமச்சிவாயவே. (௬)

நரகமேழ்புகநாடினராயினு
முரைசெய்வாயினராயினுருத்திரர்
விரவியேபுகுவித்திடுமென்பரால்
வரதனுமநமச்சிவாயவே. (௭)

இலங்கைமன்னனெடுத்தவடுக்கன்மேற்
றலங்கொள்கால்விரல்சங்கரனூன்றலு
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை
நலங்கொணுமநமச்சிவாயவே. (௮)

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பரா
யாதுங்காண்பரிதாகியலந்தவ
ரோதுநாமநமச்சிவாயவே. (௯)

கஞ்சிமண்டையர்கையினுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர்விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய்
நஞ்சுள்கண்டனமச்சிவாயவே. (௧௦)

நந்திநாமநமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்
நமச்சிவாயத்திருப்பதிகம்.

பண் காந்தாரபஞ்சமம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினு
நற்றுணையாவதுநமச்சிவாயவே. (க)

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலமரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே. (உ)

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே. (ங)

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும்
விடுக்கிற்பிராளென்றுவினவுவோமல்லோ
மடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினுமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பதுநமச்சிவாயவே. (ச)

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே. (ரு)

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கல்லா
னலமிலனுடொறுநல்குவானலன்
குலமிலராகினுங்குலத்துக்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயவே. (சு)

வீடினுருலகினில்விழுமியதொண்டர்
கூடினாரந்நெறிகூடச்சென்றலு

மோடினேரோடிச்சென்றுருவங்காண்டலு
நாடினேனாடிற்றுநமச்சிவாயவே. (எ)

இல்லகவிளக்கதுவிருள்கெடுப்பது
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது
பல்லகவிளக்கதுபலருங்காண்பது
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே. (அ)

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
றன்னெறியேசரணாதறிண்ணமே
யந்நெறியேசென்றங்கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவதுநமச்சிவாயவே. (கூ)

மாப்பிணைதழுவியமாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே. (கo)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

திருப்பாண்டிக்கொடுமுடி.

பண் பழம்பஞ்சுரம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (க)

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாண்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (உ)

ஓவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேற்
காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்
பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி
நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௩)

எல்லையில்புகழெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி
கல்லையுந்திவளம்பொழிந்திழிகாவிரியதன்வாய்க்கரை
நல்லவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
வல்லவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௪)

அஞ்சினார்க்கரணாதியென்றடியேனுநான்மிகவஞ்சினே
னஞ்சலென்றடித்தொண்டனேற்கருணல்கினாய்க்கழிகின்றதென்
பஞ்சின்மெல்லடிப்பாவைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
நஞ்சணிகண்டநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௫)

ஏடுவானிளந்திங்கள்சூடினையென்பின்கொல்புலித்தோலின்மே
லாடுபாம்பதரைக்கசைத்தவழகனேயந்தண்காவிரிப்
பாடுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடிச்
சேடனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௬)

விரும்பிநின்மலர்ப்பாதமேநினைந்தேன்வினைகளும்விண்டன, நெருங்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெறநின்றகாவிரிக்கோட்டிடைக், குரும்பைமென்முலைக்கோதைமார்குடைந் தாடுபாண்டிக்கொடுமுடி, விரும்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (எ)

செம்பொனேர்சடையாய்திரிபுரந்தீயெழச்சிலைகோவினாய்
வம்புலாங்குழலாளைப்பாகமமர்ந்துகாவிரிக்கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில்கூவமாமயிலாடுபாண்டிக்கொடுமுடி
நம்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (அ)

சாரணன்றந்தை யெம்பிரானெந்தை தம்பிரானென்பொன்மாமணி
பேரெணாயிரகோடிதேவர்பிதற்றிநின்றுபிரிகிலார் [யென்று
நாரணன்பிரமன்றொழுங்கறையூரிற்பாண்டிக்கொடுமுடிக்
காரணாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௯)

கோணியபிறைசூடியைக்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லியைப், பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பாம்பரை, நாணனைத்தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைத்துன்பமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருக்ஷேத்திரக்கோவை.

பண் இந்தளம்.

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரூர்தில்லையம்பலம்வல்லநல்லம்
  வடகச்சியுமச்சிறுபாக்கநல்ல
கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணி
  கடல்சூழ்கழிப்பாலைதென்கோடிபீடார்
நீரூர்வயனின்றியூர்குன்றியூருங்
  குருகாவையூர்நாரையூர்நீடுகானப்
பேரூர்நன்னீள்வயனெய்த்தானமும்
  பிதற்றாய்பிறைசூடிதன்பேரிடமே. (க)

அண்ணாமலையீங்கோயுமத்திமுத்தா
  றகலாமுதுகுன்றங்கொடுங்குன்றமுங்
கண்ணார்கழுக்குன்றங்கயிலைகோணம்
  பயில்கற்குடிகாளத்திவாட்போக்கியும்
பண்ணார்மொழிமங்கையோர்பங்குடையான்
  பரங்குன்றம்பருப்பதம்பேணிநின்றே
யெண்ணாயிரவும்பகலுமிடும்பைக்
  கடனீந்தலாங்காரணமே. (உ)

அட்டானமென்றோதியநாலிரண்டு
  மழகன்னுறைகாவனைத்துந்துறைக
ளெட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங்
  குளமூன்றுங்களமஞ்சும்பாடிநான்கு
மட்டார்குழலாண்மலைமங்கைபங்கன்
  மதிக்குமிடமாகியபாழிமூன்றுஞ்
சிட்டானவன்பாசூரென்றேவிரும்பா
  யரும்பாவங்களாயினதேய்ந்தறவே. (௩)

அறப்பள்ளியகத்தியான்பள்ளிவெள்ளைப்பொடிப்பூசி
  நீறணிவானமர்காட்டுப்பள்ளி
சிறப்பள்ளிசிராப்பள்ளிசெம்பொன்பள்ளி
  திருநனிபள்ளிசீர்மகேந்திரத்து

பிறப்பில்லவன்பள்ளிவெள்ளச்சடையான்
விரும்பும்மிடைப்பள்ளிவண்சக்கரமா
லுறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளி
யுணராய்மடநெஞ்சமேயுன்னிநின்றே. (௪)

ஆறைவடமாகறலம்பரையா
றணியார்பெருவேளூர்விளமர்தெங்கூர்
சேறைதுலைபுகலூரகலாதிவை
காதலித்தானவன்சேர்பதியே. (௫)

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராரு
மதிகூர்திருக்கூடலிலாலவாயு
மினவஞ்சொலிலாவிடைமாமருது
மிரும்பைப்பதிமாகாளம்வெற்றியூருங்
கனமஞ்சினமால்விடையான்விரும்புங்
கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர்
தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின்
றவமாமலமாயினதானறுமே. (௬)

மாட்டூர்மடப்பாச்சிலாச்சிராம
முண்டீச்சரம்வாதவூர்வாரணாசி
காட்டூர்கடம்பூர்படம்பக்கங்கொட்டுங்
கடலொற்றியூர்மற்றுறையூரவையுங்
கோட்டூர்திருவாமாத்தூர்கோழம்பமுங்
கொடுங்கோவலூர்திருக்குணவாயில். (௭)

குலாவுதிங்கட்சடையான்குளிரும்பருதிநியமம்
போற்றூரடியார்வழிபாடொழியாத்
தென்புறம்பயம்பூவணம்பூழியூருங்
காற்றூர்வரையன்றெடுத்தான்முடிதோணெரித்தா
னுறைகோயிலென்றென்றுநீகருதே. (௮)

நெற்குன்றமோத்தூர்நிறைநீர்மருக
னெடுவாயில்குறும்பலாநீடுதிரு
நற்குன்றம்வலம்புரநாகேச்சுர
நளிர்சோலையுஞ்சேனைமாகாளம்வாய்மூர்
கற்குன்றமொன்றேந்திமழைதடுத்த
கடல்வண்ணனுமாமலரோனுங்காணச்
சொற்கென்றுந்தொலைவிலாதானுறையுங்
குடமூக்கென்றுசொல்லிக்குலாவுமினே. (௯)

குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ்
குருந்தங்குடிதேவன்குடிமருவு
மத்தங்குடிதண்டிருவண்குடியு
மலம்புஞ்சலந்தன்சடைவைத்துகந்த
நித்தன்னிமலனுமையோடுங்கூட
நெடுங்காலமுறைவிடமென்றுசொல்லாப்
புத்தர்புறங்கூறியபுன்சமணர்
நெடும்பொய்களைவிட்டுநினைந்துய்மினே. (க0)

அம்மானையருந்தவமாகிநின்ற
வமரர்பெருமான்பதியானவுன்னிக்
கொய்ம்மாமலர்ச்சோலைகுலாவுகொச்சைக்
கிறைவன்சிவஞானசம்பந்தன்சொன்ன
விம்மாலையீரைந்துமிருநிலத்தி
லிரவும்பகலுநினைந்தேத்திநின்று
விம்மாவெருவாவிரும்பும்மடியார்
விதியார்பிரியார்சிவன்சேவடிக்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்

திருக்ஷேத்திரக்கோவை.

திருத்தாண்டகம்.

க்ஷேத்திரம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலமுஞ்செம்பொன்பள்ளி
தேவன்குடிசிராப்பள்ளிதெங்கூர்
கொல்லிக்குளிரறைப்பள்ளிகோவல்
வீரட்டங்கோகரணங்கோடிகாவு
முல்லைப்புறவமுருகன்பூண்டி
முழையூர்பழையாறைசத்திமுற்றங்
கல்லிற்றிகழ்சீரார்காளத்தியுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (க)

ஆரூர்மூலட்டானமானைக்காவு
மாக்கூரிற்றான்றோன்றிமாடமாவூர்
பேரூர்பிரமபுரம்பேராவூரும்
பெருந்துறைகாம்பீலிபிடவூர்பேணுங்
கூரார்குறுக்கைவீரட்டானமுங்
கோட்டூர்குடமூக்குக்கோழம்பமுங்
காரார்கழுக்குன்றுங்காளப்பேருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (உ)

இடைமருதீங்கோயிராமேச்சர
மின்னம்பரேரிடவையேமப்பேறூர்
சடைமுடிசாலைக்குடிதக்களூர்
தலையாலங்காடுதலைச்சங்காடு
கொடுமுடிகுற்றாலங்கொள்ளம்பூதூர்
கோத்திட்டைகோட்டாறுகோட்டுக்காடு
கடைமுடிகானூர்கடம்பந்துறை
கயிலாயநாதனையேகாணலாமே. (ங)

எச்சிலிளமரேமநல்லூ
ரிலம்பையங்கோட்டூரிறையான்சேரி
யச்சிறுபாக்கமளப்பூரம்ப
ராவடுதண்டுறையழுந்தூராறை
கச்சினங்கற்குடிகச்சூராலக்
கோயில்கரவீரங்காட்டுப்பள்ளி
கச்சிப்பலதளியுமேகம்பத்துங்
கயிலாயநாதனையேகாணலாமே. (ச)

கொடுங்கோளூரஞ்சைக்களஞ்செங்குன்றூர்
கொங்கணங்குன்றியூர்குரக்குக்காவு
நெடுங்களநன்னிலநெல்லிக்காவு
நின்றியூர்நீடூர்நியமநல்லூ
ரிடும்பாவனமெழுமூரேழூர்தோழூ
ரெறும்பியூரேராருமேமகூடங்
கடம்பையிளங்கோயிறன்னினுள்ளுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (ரு)

மண்ணிப்படிக்கரைவாழ்கொளிபுத்தூர்
வக்கரைமந்தாரம்வாரணாசி
வெண்ணிவிளத்தொட்டிவேள்விக்குடி
விளமர்விராடபுரம்வேட்களத்தும்

பெண்ணையருட்டுறைதண்பெண்ணாகடம்
 பிரம்பில்பெரும்புலியூர்பெருவேளூருங்
கண்ணைகளர்க்காறைகழிப்பாலையுங்
 கயிலாயநாதனையேகாணலாமே. (கூ)

வீழிமிழலைவெண்காடுவேங்கூர்
 வேதிகுடிவிசயமங்கைவியலூ
ராழியகத்தியான்பள்ளியண்ணா
 மலையாலங்காடுமரதைப்பெரும்
பாழிபழனம்பனந்தாள்பாதாளம்
 பராய்த்துறைபைஞ்ஞீலிபனங்காட்டூர்தண்
காழிகடனாகைக்காரோணத்துங்
 கயிலாயநாதனையேகாணலாமே. (எ)

உஞ்சேனைமாகாளமூறலோத்தூ
 ருருத்திரகோடிமறைக்காட்டுள்ளு
மஞ்சார்பொதியின்மலைதஞ்சைவழுவூர்
 வீரட்டமாதானங்கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடன்மியச்சூர்வைகா
 வேதீச்சுரம்விவீசுரம்வெற்றியூருங்
கஞ்சனூர்கஞ்சாறுபஞ்சாக்கையுங்
 கயிலாயநாதனையேகாணலாமே. (அ)

திண்டீச்சரஞ்சேய்ஞலூர்செம்பொன்பள்ளி
 தேவூர்சிரபுரஞ்சிற்றேமஞ்சேறை
கொண்டீச்சரங்கூந்தலூர்கூழையூர்கூடல்
 குருகாவூர்வெள்ளடைகுமரிகொங்கு
அண்டர்தொழுமதிகைவீரட்டான
 மையாறசோகந்தியாமாத்தூருங்
கண்டியூர்வீரட்டங்கருகாவூருங்
 கயிலாயநாதனையேகாணலாமே. (கூ)

நறையூரிற்சித்தீச்சரநள்ளாறு
 நாரையூர்நாகேச்சரநல்லூர்நல்ல
துறையூர்சோற்றுத்துறைசூலமங்கை
 தோணிபுரந்துருத்திசோமீச்சர
முறையூர்கடலொற்றியூருற்றத்தூ
 ரோமாம்புலியூரோரேடகத்துங்
கறையூர்கருப்பறியல்கன்றாப்பூருங்
 கயிலாயநாதனையேகாணலாமே. (கo)

புலிவலம்புத்தூர்புகலூர்புன்கூர்
புறம்பயம்பூவணம்பொய்கைநல்லூர்
வலிவலமாற்பேறுவாய்மூர்வைகல்
வலஞ்சுழிவாஞ்சியமருகல்வன்னி
நிலமலிநெய்த்தானத்தோடெத்தானத்து
நிலவுபெருங்கோயில்பலகண்டாற்றெண்டீர்
கலிவலிமிக்கோனைக்கால்விரலாற்செற்ற
கயிலாயநாதனையேகாணலாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

ஊர்த்தொகை.

பண் பழம்பஞ்சுரம்.

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டூர்க்கடலேகடம்பூர்மலையேகானப்பேரூராய்
கோட்டூர்க்கொழுந்தேயழுந்தூரரசேகொழுநற்கொல்லேறே
பாட்டூர்பலரும்பரவப்படுவாய்பனங்காட்டூரானே
மாட்டூரறவாமறவாதுன்னைப்பாடப்பணியாயே. (க)

கொங்கிற்குறும்பிற்குரக்குத்தளியாய்குழகாகுற்றாலா
மங்குற்றிரிவாய்வானோர்தலைவாவாய்மூர்மணவாளா
சங்கக்குழையார்செவியாவழகாவவியாவனலேந்திக்
கங்குற்புறங்காட்டாடீயடியார்கவலைகளையாயே. (உ)

நிறைக்காட்டானேநெஞ்சத்தானேநின்றியூரானே
மிறைக்காட்டானேபுனல்சேர்சடையாயனல்சேர்கையானே
மறைக்காட்டானேதிருமாந்துறையாய்மாகோணத்தானே
யிறைக்காட்டாயேயெங்கட்குன்னையெம்மான்றம்மானே. (ஈ)

ஆரூரத்தாவையாற்றமுதேயளப்பூரம்மானே
காரூர்பொழில்கள்புடைசூழ்புறவிற்கருகாவூரானே
பேரூருறைவாய்பட்டிப்பெருமான்பிறவாநெறியானே
பாரூர்பலரும்பரவப்படுவாய்பாசூரம்மானே. (ச)

மருகலுறைவாய்மாகாளத்தாய்மதியஞ்சடையானே
யருகற்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே

கருகற்குரலாய்வெண்ணிக்கரும்பேகானூர்க்கட்டியே
பருகப்பணியாயடியார்க்குன்னைப்பவளப்படியானே. (ரு)

தாங்கூர்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே
வேங்கூருறைவாய்விளமர்நகராய்விடையார்கொடியானே
நாங்கூருறைவாய்தேங்கூர்நகராய்நல்லூர்நம்பரனே
பாங்கூர்பலிதேர்பரனேபரமாபழனப்பதியானே. (சு)

தேனைக்காவல்கொண்டுவிண்டகொன்றைச்செழுந்தாராய்
வானைக்காவல்கொண்டுநின்றாரறியாநெறியானே
யானைக்காவிலரனேபரனேயண்ணாமலையானே
யூனைக்காவல்கைவிட்டுன்னையுகப்பாருணர்வாரே. (எ)

திருத்திச்சுடரேநெய்த்தானத்தாய்சொல்லாய்கல்லாலா
பருத்தியமத்துறைவாய்வெயிலாய்ப்பலவாய்க்காற்றானாய்
திருத்தித்திருத்திவந்தென்சிந்தையிடங்கொள்கயிலாயா
வருத்தித்துன்னையடைந்தார்வினைகளகலவருளாயே. (அ)

புலியூர்ச்சிற்றம்பலத்தாய்புகலூர்ப்போதாமூதூரா
பொலிசேர்புரமூன்றெரியச்செற்றபுரிபுன்சடையானே
வலிசேரரக்கன்றடக்கையைஞ்ஞான்கடர்த்தமதிசூடீ
கலிசேர்புறவிற்கடவூராளீகாணவருளாயே. (கூ)

கைம்மாவுரிவையம்மான்காக்கும்பலவூர்கருத்துன்னி
மைம்மாந்தடங்கண்மதுரமன்னமொழியாண்மடச்சிங்கடி
தம்மானூரன்சடையன்சிறுவனடியன்றமிழ்மாலை
செம்மாந்திருந்துதிருவாய்திறப்பார்சிவலோகத்தாரே. (கூ0)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருவெழுகூற்றிருக்கை.

சிவனுநவம்.

திருச்சிற்றம்பலம்.

ஓருருவாயினைமானாங்காரத்
தீரியல்பாயொருவிண்முதல்பூதல
மொன்றியவிருசுடரும்பர்கள்பிறவும்
படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை
யிருவரோடொருவனாகிநின்றனை
யோரானீழலொண்கழலிரண்டு

முப்பொழுதேத்தியநால்வர்க்கொளிநெறி
காட்டினைநாட்டமூன்றுகக்கோட்டினை
யிருநதியரவமோடொருமதிசூடினை
யொருதாளீரயின்மூவிலைச்சூல
நாற்கான்மான்மறியைந்தலையரவ
மேந்தினைகாய்ந்தநால்வாய்மும்மதத்
திருகோட்டொருகரியீடழித்துரித்தனை
யொருதனுவிருகால்வளையவாங்கி
முப்புரத்தோடுநானிலமஞ்சக்
கொன்றுதலத்துறவவுணரையறுத்தனை
யைம்புலனுலாமந்தக்கரண
முக்குணமிருவளியொருங்கியவானோ
ரேத்தநின்றனையொருங்கியமனத்தோ
டிருபிறப்போர்ந்துமுப்பொழுதுகுறைமுடித்து
நான்மறையோதியைவகைவேள்வி
யமைத்தாறங்கமுதலெழுத்தோதி
வரன்முறைபயின்றெழுவான்றனைவளர்க்கும்
பிரமபுரம்பேணினை
யறுபதமுரலும்வேணுபுரம்விரும்பினை
யிகலியமைந்துணர்புகலியமர்ந்தனை
பொங்குநாற்கடல்சூழ்வெங்குருவிளங்கினை
பாணிமூவுலகும்புதையமேன்மிதந்த
தோணிபுரத்துறைந்தனைதொலையாவிருநிதி
வாய்ந்தபூந்தராயேய்ந்தனை
வரபுரமென்றுணர்சிரபுரத்துறைந்தனை
யொருமலையெடுத்தவிருதிறலரக்கன்
விறல்கெடுத்தருளினைபுறவம்புரிந்தனை
முந்நீர்த்துயின்றோனான்முகனறியாப்
பண்பொடுநின்றனைசண்பையமர்ந்தனை
யையுறுமமணருமறுவகைத்தேரு
மூழியுமுணராக்காழியமர்ந்தனை
யெச்சனேழிசையோன்கொச்சையைமெச்சினை
யாறுபதமுமைந்தமர்கல்வியு
மறைமுதனான்கு
மூன்றுகாலமுந்தோன்றநின்றனை
யிருமையினொருமையுமொருமையின்பெருமையு
மறுவிலாமறையோர்

கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியனறியு
மனையதன்மையையாதலினின்னை
நினையவல்லவரில்லைநீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருக்கடவூர்மயானம்.

பண் காந்தாரம்.

சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணக்கி
யெரியமதில்களெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே. (க)

மங்கைமணந்தமார்பர்மழுவாள்வலனொன்றேந்திக்
கங்கைசடையிற்கரந்தார்கடவூர்மயானமமர்ந்தார்
செங்கண்வெள்ளேறேறிச்செல்வஞ்செய்யாவருவா
ரங்கையேறியமறியாரவரெம்பெருமானடிகளே. (உ)

ஈடவிடபமிசையவேறிமழுவொன்றேந்திக்
காடதிடமாவுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பாடலிசைகொள்கருவிபடுதம்பலவும்பயில்வா
ராடலரவமுடையாரவரெம்பெருமானடிகளே. (ந)

இறைநின்றிலங்குவளையாளிளையாளொருபாலுடையார்
மறைநின்றிலங்குமொழியார்மலையார்மனத்தின்மிசையார்
கறைநின்றிலங்குபொழில்சூழ்கடவூர்மயானமமர்ந்தார்
பிறைநின்றிலங்குசடையாரவரெம்பெருமானடிகளே. (ச)

வெள்ளையெருத்தின்மிசையார்விரிதோடொருகாதிலங்கத்
துள்ளுமிளமான்மறியார்சுடர்பொற்சடைகடுலங்கக்
கள்ளநகுவெண்டலையார்கடவூர்மயானமமர்ந்தார்
பிள்ளைமதியமுடையாரவரெம்பெருமானடிகளே. (ரு)

பொன்றாதுதிருமணங்கொள்புனைபூங்கொன்றைபுனைந்தா
ரொன்றாவெள்ளேறுயர்த்ததுடையாரதுவேயூர்வார்
கன்றாவினஞ்சூழ்புறவிற்கடவூர்மயானமமர்ந்தார்
பின்றாழ்சடையாரொருவரவரெம்பெருமானடிகளே. (சு)

பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையா
ராசைதீரக்கொடுப்பாரலங்கல்விடைமேல்வருவார்
காசைமலர்போன்மிடற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரெம்பெருமானடிகளே. (எ)

செற்றவரக்கனலறத்திகழ்சேவடிமெல்விரலாற்
கற்குன்றடர்த்தபெருமான்கடவூர்மயானமமர்ந்தார்
மற்றொன்றிணையில்வலியமாசில்வெள்ளிமலைபோற்
பெற்றொன்றேறிவருவாரவரெம்பெருமானடிகளே. (அ)

வருமாகரியினுரியார்வளர்புன்சடையார்விடையார்
கருமானுரிதோலுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
திருமாலொடுநான்முகனுந்தேர்ந்துங்காணமுன்னொண்ணாப்
பெருமானெனவும்வருவாரவரெம்பெருமானடிகளே. (கூ)

தூயவிடைமேல்வருவார்துன்னாருடையமதில்கள்
காயவேவச்செற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
தீயகருமஞ்சொல்லுஞ்சிறுபுன்றேரரமணர்
பேய்பேயென்னவருவாரவரெம்பெருமானடிகளே. (க0)

மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
வரவமசைத்தபெருமானகலமறியலாகப்
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
யிரவும்பகலும்பரவிநினைவார்வினைகளிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்

கோயிற்றிருவிருத்தம்.

பண் கொல்லி.

சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறிவாழ்வயற்றில்லைதன்னு

ளாளவுடைக்கழற்சிற்றம்பலத்தரனாடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற்பின்னைப்பேய்த்தொண்டர்காண்பதென்னே.

பொருவிடையொன்றுடைப்புண்ணியமூர்த்திபுலியதள
னுருவுடையம்மலைமங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (உ)

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுது
மடுத்துவணங்குமயனொடுமாலுக்குங்காண்பரியான்
பொடிக்கொண்டணிந்துபொன்னாகியதில்லைச்சிற்றம்பலவ
னுடுத்ததுகில்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (ங)

வைச்சபொருணமக்காகுமென்றெண்ணிநமச்சிவாய
வச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. (ச)

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான்
கைஞ்ஞின்றவாடல் கண்டாற்பின்னைக்கண்கொண்டு காண்பதென் [னே.

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட்கொண்டவன்
றேனொத்தெனக்கினியான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கு
மேனத்தெயிறுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. ()

தெரித்தகணையாற்றிரிபுரமூன்றுஞ்செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவனிமையவர்கோமானிணையடிக
டரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (எ)

சுற்றுமமரர்சுரபதிநின்றிருப்பாதமல்லாற்
பற்றொன்றிலோமென்றழைப்பப்பரவையுணஞ்சையுண்டான்
செற்றங்கநங்கனைத்தீவிழித்தான்றில்லையம்பலவ
னெற்றியிற்கண்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே (அ)

சித்தத்தெழுந்தசெழுங்கமலத்தன்னசேவடிகள்
வைத்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
முத்தும்வயிரமுமாணிக்கந்தன்னுள்விளங்கியதூ
மத்தமலர்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (கூ)

தருக்குமிகுத்துத்தன்றேள்வலியுன்னித்தடவரையை
வரைக்கைகளாலெடுத்தார்ப்பமலேமகள்கோன்சிரித்து
வரக்கன்மணிமுடிபத்துமணிதில்லேயம்பலவ
னெருக்கிமிதித்தவிரல்கண்டகண்கொண்டுகொண்பதென்னே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர்

திருப்பூவணம்.

திருத்தாண்டகம்.

சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவேறுதிரிசூலந்தோன்றுந்தோன்றும்
வளர்சடைமேலிளமதியந்தோன்றுந்தோன்றுங்
கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன்றுங்
காதில்வெண்குழை தோடு கலந்து தோன்று
மிடியேறுகளிற்றுரிவைப்போர்வைதோன்று
மெழிறிகழுந்திருமுடியுமிலங்கித்தோன்றும்
பொடியேறுதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனர்க்கே. (௧)

ஆணுகிப்பெண்ணுயவடிவுதோன்று
மடியவர்கட்காரமுதமாகித்தோன்று
மூணுகியூர்திரிவானுகித்தொன்று
மொற்றைவெண்பிறைதோன்றும்பற்றூர்தம்மேற்
சேணுகவரைவில்லாலெரித்தருேன்றுஞ்
செத்தவர்தமெலும்பினுற்செறியச்செய்த
பூணுணுமரைநாணும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனர்க்கே. (௨)

கல்லாலினீழற்கலந்துதோன்றுங்
கவின்மறையோர்நால்வர்க்குநெறிகளன்று
சொல்லாகச்சொல்லியவாதோன்றுந்தோன்றுஞ்
சூழரவுமான்மறியுந்தோன்றுந்தோன்று

மல்லாதகாலனைமுன்னடர்த்தருேன்று
மைவகையானினைவார்பாலமர்ந்துதோன்றும்
பொல்லாதபுலாலெலும்புபூணுய்த்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே. (௩)

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும்
பன்னிரண்டுகண்ணுடையபிள்ளைதோன்று
நடைமலிந்தவிடையோடுகொடியுந்தோன்று
நான்மறையினொலிதோன்றுநயனந்தோன்று
முடைமலிந்தகோவணமுங்கீளுந்தோன்று
மூரல்வெண்சிரமாலையுலாவித்தோன்றும்
புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே. (௪)

மயலாகுந்தன்னடியார்க்கருளுந்தோன்று
மாசிலாப்புன்சடைமேன்மதியந்தோன்று
மியல்பாகவிடுபிச்சையேற்றருேன்று
மிருங்கடனஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றுங்
கயல்பாயக்கடுங்கலுழிக்கங்கைநங்கை
யாயிரமாமுகத்தினொடுவானிற்றேன்றும்
புயல்பாயச்சடைவிரித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே. (௫)

பாராழிவட்டத்தார்பரவியிட்ட
பன்மலருநறும்புகையும்பரந்துதோன்றுஞ்
சீராழித்தாமரையின்மலர்களன்ன
திருந்தியமாநிறத்தசேவடிகடோன்று
மோராழித்தேருடையவிலங்கைவேந்த
னுடறுணித்தவிடர்பாவங்கெடுப்பித்தன்று
போராழிமுன்னீந்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே. (௬)

தன்னடியார்க்கருள்புரிந்ததகவுதோன்றுஞ்
சதுர்முகனைத்தலையறிந்ததன்மைதோன்று
மின்னனையநுண்ணிடையாள்பாகந்தோன்றும்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தருேன்றுந்
துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந்
தூயமாமதியுடனேவைத்தருேன்றும்
பொன்னனையதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே. (௭)

செறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந்
திரிபுரத்தையெரிசெய்தசிலையுந்தோன்று
நெறியதனைவிரித்துரைத்தநேர்மைதோன்று
நெற்றிமேற்கண்டோன்றும்பெற்றந்தோன்று
மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்று
மலைமகளுஞ்சலமகளுமலிந்துதோன்றும்
பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனூர்க்கே. (அ)

அருப்போட்டுமுலைமடவாள்பாகந்தோன்று
மணிகிளருமுருமென்னவடர்க்குங்கேழன்
மருப்போட்டுமணிவயிரக்கோவைதோன்று
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்
திருக்கோட்டினின்றதோர்திறமுந்தோன்றுஞ்
செக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்போட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனூர்க்கே. (கூ)

ஆங்கணைந்தசண்டிக்குமருளியன்று
தன்முடிமேலலர்மாலையளித்தறோன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று
பலபிறவியறுத்தருளும்பரிசுந்தோன்றுங்
கோங்கணைந்தகூவிளமுமதமத்தமுங்
குழற்கணிந்தகொள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனூர்க்கே. (க0)

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுதோன்று
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனூர்க்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனர்

திருக்கடவூர்மயானம்.

பண் பழம்பஞ்சுரம்.

சிவனுநவம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேன்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௧)

விண்ணேர்தலைவர்வெண்புரிநூன்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலையர்காலகாலர்கடவூர
ரெண்ணர்புரமூன்றெரிசெய்தவிறைவரிமையோரொருபாகம்
பெண்ணுணவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௨)

காயும்புலியினதளுடையர்கண்டரெண்டோட்கடவூரர்
தாயுந்தந்தைபல்லுயிர்க்குந்தாமேயாயதலைவனர்
பாயும்விடையொன்றதுவேறிப்பலிதேர்ந்துண்ணும்பரமேட்டி
பேய்கள்வாழுமயானத்துப்பெரியபெருமானடிகளே. (௩)

நறைசேர்மலரைங்கணையானைநயனத்தீயாற்பொடிசெய்த
விறையாராவரெல்லார்க்குமில்லையென்னதருள்செய்வார்
பறையார்முழவம்பாட்டோடுபயிலுந்தொண்டர்பயில்கடவூர்ப்
பிறையார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௪)

கொத்தார்கொன்றைமதிசூடிக்கோணுகங்கள்பூணுக
மத்தயானையுரிபோர்த்துமருப்புமாமைத்தாலியார்
பத்திசெய்துபாரிடங்கள்பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௫)

துணிவார்கீளுங்கோவணமுந்துதைந்துசுடலைப்பொடியணிந்து
பணிமேலிட்டபாசுபதர்பஞ்சவடிமார்பினர்கடவூர்த்
திணிவார்குழையார்புரமூன்றுந்தீவாய்ப்படுத்தசேவகனர்
பிணிவார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௬)

காரார்கடலினஞ்சுண்டகண்டர்கடவூருறைவாணர்
தேராரரக்கன்போய்வீழ்ந்துசிதையவிரலாலூன்றினு

ரூர்தானுவதுலகேழுமுடையார்க்கொற்றியூராரூர்
பேராயிரவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (எ)

வாடாமுலையாடன்னேடுமெகிழ்ந்துகானில்வேடுவனாய்க்
கோடார்கேழற்பின்சென்றுகுறுகிவிசயன்றவமழித்து
நாடாவண்ணஞ்செருச்செய்துவாவநாழிநிலையருள்செய்
பீடார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (அ)

வேழமுரிப்பார்மழுவாளர்வேள்வியழிப்பர்சிரமறுப்ப
ராழியளிப்பரரிதனக்குவானஞ்சுகப்பரமுரைப்ப
ரேழைதலைவர்கடவூரிலிறைவர்சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௯)

மாடமல்குகடவூரின்மறையோரேத்துமயானத்துப்
பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலாரூரனம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருவாழ்கொளிபுத்தூர்.

பண் தக்கராகம்.

திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழக்
கொடியுடையூர்திரிந்தையங்கொண்டுபலபலகூறி
வடிவுடைவாணெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்றானடிகாண்போம். (௧)

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவம்மசைத்தையம்
புரைகெழுவெண்டலையேந்திப்போர்விடையேறிப்புகழ
வரைகெழுமங்கையதாகமோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரைகமழ்மாமலர்தூவிவிரிசடையானடிசேர்வோம். (௨)

பூணெடுநாகமசைத்தனலாடிப்புன்றலையங்கையிலேந்தி
யூணிடுபிச்சையூரையமுண்டியென்றுபலகூறி [தூர்த்
வாணெடுங்கண்ணுமை மங்கையோர்பாக மாயவன்வாழ்கொளிபுத்
தாணெடுமாமலரிட்டுத்தலைவனதாணிழல்சார்வோம். (௩)

தாரிடுகொன்றையோர்வெண்மதிகங்கைதாழ்சடைமேலவைசூடி
யூரிடுபிச்சைகொள்செல்வமுண்டியென்றுபலகூறி
வாரிடுமென்முலைமாதொருபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
காரிடுமாமலர்தூவிக்கறைமிடற்றானடிகாண்போம். (௪)

கனமலர்க்கொன்றையலங்கலிலங்கக்காதிலோர்வெண்குழையோடு
புனமலர்மாலைபுனைந்தூர்புகுதியென்றேபலகூறி
வனமுலைமாமலைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூ
ரினமலரேய்ந்தனதூவியெம்பெருமானடிசேர்வோம். (௫)

அளைவளர்நாகமசைத்தனலாடி யலர்மிசையந்தணனுச்சிக்
களைதலையிற்பலிகொள்ளுங் கருத்தனேகள்வனேயென்று [ர்த்
வளையொலிமுன்கைமடந்தையோர்பாக மாயவன்வாழ்கொளிபுத்தூ
தளையவிழ்மாமலர்தூவித் தலைவனதாளிணைசார்வோம். (௬)

அடர்செவிவேழத்தினீருரிபோர்த்து வழிதலையங்கையிலேந்தி
யுடலிடுபிச்சையோடைய முண்டியென்றுபலகூறி
மடனெடுமாமலர்க்கண்ணியோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தடமலராயினதூவித் தலைவனதாணிழல்சார்வோம். (௭)

உயர்வரையொல்கவெடுத்தவரக்க னொளிர்கடகக்கையடர்த்து
வயலிடுபிச்சையோடைய மார்தலையென்றடிபோற்றி
வயல்விரிநீலநெடுங்கணிபாக மாயவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சயவிரிமாமலர்தூவித் தாழ்சடையானடிசார்வோம். (௮)

கரியவனான்முகன்கைதொழுதேத்தக் காணலுஞ்சாரலுமாகா
வெரியுருவாகியூரைய மிடுபலியுண்ணியென்றேத்தி
வரியரவல்குன்மடந்தையோர்பாக மாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரிமலராயினதூவி விகிர்தனசேவடிசேர்வோம். (௯)

குண்டமணர்துவர்க்கூறைகண்மெய்யிற் கொள்கையினார்புறங்கூற
வெண்டலையிற்பலிகொண்டல் விரும்பினையென்றுவிளம்பி
வண்டமர்பூங்குழன்மங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தொண்டர்கண்மாமலர்தூவத் தோன்றநின்றானடிசேர்வோம். (௧௦)

கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குங் கரைபொருகாழியமூதூர்
நல்லுயர்நான்மறைநாவி னற்றமிழ்ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும்வெண்மழுவாளும்வல்லவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சொல்லியபாடல்கள்வல்லார் துயர்கெடுதல்லெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்

திருவதிகைவீரட்டானம்.

திருவடித்திருத்தாண்டகம்.

திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

அரவணையான்சிந்தித்தரற்றும்மடி
யருமறையான்சென்னிக்கணியாமடி
சரவணத்தான்கைதொழுதுசாரும்மடி
சார்ந்தார்கட்கெல்லாஞ்சரணுமடி
பரவுவார்பாவம்பறைக்கும்மடி
பதினெண்கணங்களும்பாடும்மடி
விரவுநீர்த்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (க)

கொடுவினையாரென்றுங்குறுகாவடி
குறைந்தடைந்தாராழாமைக்காக்கும்மடி
படுமுழவம்பாணிபயிற்றும்மடி
பதைத்தெழுந்தவெங்கூற்றைப்பாய்ந்தவடி
கடுமுரணேறூர்ந்தான்கழற்சேவடி
கடல்வையங்காப்பான்கருதும்மடி
நெடுமதியங்கண்ணியணிந்தானடி
நிறைகெடிலவீரட்டநீங்காவடி. (உ)

வைதெழுவார்காமம்பொய்போகாவடி
வஞ்சவலைப்பாடொன்றில்லாவடி
கைதொழுதுநாமேத்திக்காணும்மடி
கணக்குவழக்கைக்கடந்தவடி
நெய்தொழுதுநாமேத்தியாட்டும்மடி
நீள்விசும்பையூடறுத்துநின்றவடி
தெய்வப்புனற்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (௩)

அரும்பித்தசெய்ஞ்ஞாயிறேய்க்கும்மடி
யழகெழுதலாகாவருட்சேவடி
சுரும்பித்தவண்டினங்கள்சூழ்ந்தவடி
சோமனையுங்காலனையுங்காய்ந்தவடி

பெரும்பித்தர்கூடிப்பிதற்றும்மடி
பிழைத்தார்பிழைப்பறியவல்லவடி
திருந்துநீர்த்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (௪)

ஒருகாலத்தொன்ருகிநின்றவடி
யூழிதோறூழியுயர்ந்தவடி
பொருகழலும்பல்சிலம்பும்மார்க்கும்மடி
புகழ்வார்புகழ்தகையவல்லவடி
யிருநிலத்தாரின்புற்றங்கேத்தும்மடி
யின்புற்ருரிட்டபூவேறும்மடி
திருவதிகைத்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (௫)

திருமகட்குச்செந்தாமரையாமடி
சிறந்தவர்க்குத்தேனுய்விளைக்கும்மடி
பொருளவர்க்குப்பொன்னுரையாய்நின்றவடி
புகழ்வார்புகழ்தகையவல்லவடி
யுருவிரண்டுமொன்ருேடொன்ருெவ்வாவடி
யுருவென்றுணரப்படாதவடி
திருவதிகைத்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (௬)

உரைமாலையெல்லாமுடையவடி
யுரையாலுணரப்படாதவடி
வரைமாதைவாடாமைவைக்கும்மடி
வானவர்கடாம்வணங்கிவாழ்த்தும்மடி
யரைமாத்திரையிலடங்கும்மடி
யகலமளக்கிற்பாரில்லாவடி
கரைமாங்கலிக்கெடிலநாடன்னடி
கமழ்வீரட்டானக்காபாலியடி. (௭)

நறுமலராய்நாறுமலர்ச்சேவடி
நடுவாயுலகநாடாயவடி
செறிகதிருந்திங்களுமாய்நின்றவடி
தீத்திரளாயுள்ளேதிகழ்ந்தவடி
மறுமதியைமாசுகழுவும்மடி
மந்திரமுந்தந்திரமுமாயவடி
யெறிகெடிலநாடர்பெருமானடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (௮)

அணியனவுஞ்சேயனவுமல்லாவடி
யடியார்கட்காரமுதமாயவடி
பணிபவர்க்குப்பாங்காகவல்லவடி
பற்றற்ருர்பற்றும்பவளவடி
மணியடிபொன்னடிமாண்பாமடி
மருந்தாய்ப்பிணிதீர்க்கவல்லவடி
தணிபாடுதண்கெடிலநாடன்னடி
தகைசார்வீரட்டத்தலைவன்னடி. (௯)

அந்தாமரைப்போதலர்ந்தவடி
யரக்கனையுமாற்றலழித்தவடி
முந்தாகிமுன்னேமுளைத்தவடி
முழங்கழலாய்நீண்டவெம்மூர்த்தியடி
பந்தாடுமெல்விரலாள்பாகன்னடி
பவளத்தடவரையேபோல்வானடி
வெந்தார்சுடலைநீறுடும்மடி
வீரட்டங்காதல்விமலன்னடி. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனர்

திருப்புன்கூர்.

பண் தக்கேசி.

திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுத
வவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனுருயிரதனை
வவ்வினுய்க்குன்றன்வண்மைகண்டடியே
னெந்தைநீயெனைநமன்றமர்நலியி
லிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௧)

வையகமுற்றுமாமழைமறந்து
வயலினீரிலைமாநிலந்தருகோ
முய்யக்கொள்கமற்றெங்களையென்ன
வொளிகொள்வெண்முகிலாய்ப்பரந்தெங்கும்

பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப்
  பெயர்த்தும்பன்னிருவேலிகொண்டருளுஞ்
செய்கைகண்டுநின்றிருவடியடைந்தேன்
  செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (உ)

ஏதநன்னிலமீரறுவேலி
  யேயர்கோனுற்றவிரும்பிணிதவிர்த்துக்
கோதனங்களின்பால்கறந்தாட்டக்
  கோலவெண்மணற்சிவன்றன்மேற்சென்ற
தாதைதாளறவெறிந்தசண்டிக்குன்
  சடைமிசைமலரருள்செயக்கண்டு
பூதவாளிநின்பொன்னடியடைந்தேன்
  பூம்பொழிற்றிருப்புன்கூருளானே. (௩)

நற்றமிழ்வல்லஞானசம்பந்த
  னாவினுக்கரையனாளைப்போவானுங்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
  கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
  கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன்
பொற்றிரண்மணிக்கமலங்கண்மலரும்
  பொய்கைசூழ்திருப்புன்கூருள்ளானே. (௪)

கோலமால்வரைமத்தெனநாட்டிக்
  கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த
வாலகஞ்சுகண்டவர்மிகவிரிய
  வமரர்கட்கருள்புரிவதுகருதி
நீலமார்கடல்விடந்தனையுண்டு
  கண்டத்தேவைத்தபித்தநீசெய்த
சீலங்கண்டுநின்றிருவடியடைந்தேன்
  செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௫)

இயக்கர்கின்னரர்யமனொடுவருண
  ரியங்குதீவளிஞாயிறுதிங்கண்
மயக்கமில்புலிவானரநாகம்
  வசுக்கள்வானவர்தானவரெல்லா
மயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனை
  யர்ச்சித்தார்பெறுமாரருள்கண்டு
திகைப்பொன்றின்றிநின்றிருவடியடைந்தேன்
  செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௬)

போர்த்தநீள்செவியாளரந்தணர்க்குப்
பொழில்கொளானிழற்கீழறம்புரிந்து
பார்த்தனுக்கன்றுபாசுபதங்கொடுத்
தருளினுய்பண்டுபகீரதன்வேண்ட
வார்த்துவந்திழியும்புனற்கங்கை
நங்கையாளைநின்சடைமிசைக்கரந்த
தீர்த்தனேநின்றன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௭)

மூவெயில்செற்றஞான்றுய்ந்தமூவரி
லிருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல்
காவலாளரென்றேவியபின்னை
யொருவனீகரிகாடரங்காக
மானைநோக்கியோர்மாநடமகிழ
மணிமுழாமுழக்கவருள்செய்த
தேவதேவநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (அ)

அறிவினுன்மிக்கவறுவகைச்சமய
மவ்வவர்க்கங்கேயாரருள்புரிந்து
வெறியுமாகடலிலங்கையர்கோனைத்
துலங்கமால்வரைக்கீழடர்த்திட்டுக்
குறிகொள்பாடலினின்னிசைகேட்டுக்
கோலவாளொடுநாளதுகொடுத்த
செறிவுகண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௯)

கம்பமால்களிற்றின்னுரியானைக்
காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குந்திருவுருவானைச்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானை
யும்பராளியையுமையவள்கோனை
யூரன்வன்றொண்டனுள்ளத்தாலுகந்
தன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோ
டைந்தும்வல்லவரருவினையிலரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

திருப்பூந்தராய்.

பண் காந்தாரபஞ்சமம்.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

பந்துசேர்விரலாள்பவளத்துவர்வாயினள்பனிமாமதிபோன்முகத்
தந்தமில்புகழாண்மலைமாதொடுமாதிப்பிரான்
வந்துசேர்விடம்வானவரெத்திசையுந்நிறைந்துவலஞ்செய்துமாமலர்
புந்திசெய்திறைஞ்சிப்பொழிபூந்தராய்போற்றுதுமே. (க)

காவியங்கருங்கண்ணினள்கனித்தொண்டைவாய்க்கதிர்முத்தநல்
வெண்ணகைத், தூவியம்பெடையன்னநடைச்சுரிமென்குழலா
டேவியுந்திருமேனியோர்பாகமா யொன்றிரண்டொருமூன்றொடுசே
ர்பதி, பூவிலந்தணனொப்பவர்பூந்தராய்போற்றுதுமே. (உ)

பையராவருமல்குன்மெல்லியல்பஞ்சினேரடிவஞ்சிகொணுண்ணி
தையலாளொருபாலுடையெம்மிறைசாருமிடஞ் [டைத்
செய்யெலாங்கழுநீர்கமலம்மலர்த்தேறலூறலிற்சேறுலராதநற்
பொய்யிலாமறையோர்பயில்பூந்தராய்போற்றுதுமே. (௩)

முள்ளிநாண்முகைமொட்டியல் கோங்கினரும்புதேன்கொள்குரும்
பைமூவாமருந், துள்ளியன்றபைம்பொற்கலசத்தியலொத்தமுலை
வெள்ளிமால்வரையன்னதோர்மேனியின் மேவினர்பதிவீமருதண்
பொழிற், புள்ளினந்துயின்மல்கியபூந்தராய்போற்றுதுமே. (௪)

பண்ணியன்றெழுமென்மொழியாள்பகர்கோதையேர்திகழ்பைந்
தளிர்மேனியோர், பெண்ணியன்றமொய்ம்பிற்பெருமாற்கிடம்பெய்
வளையார், கண்ணியன்றெழுகாவிச்செழுங்கருநீலமல்கியகாமருவாவி
நற், புண்ணியருறையும்பதிபூந்தராய்போற்றுதுமே. (௫)

வாணிலாமதிபோனுதலாண்மடமாழையொண்கணாள்வண்டரளந்
நகை, பாணிலாவியவின்னிசையார்மொழிப்பாவையொடுஞ், சேணி
லாத்திகழ்செஞ்சடையெம்மண்ணல் சேர்வதுசிகரப்பெருங்கோயில்
சூழ், போணிலாநுழையும்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (௬)

காருலாவியவார்குழலாள்கயற் கண்ணினள்புயற்காலொளிமின்னி
வாருலாவியமென்முலையாண்மலைமாதுடனாய் [டை

நீருலாவியசென்னியன்மன்னிமிகருநாமமுங்நான்குநிகழ்பதி
போருலாவெயில்சூழ்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (எ)

காசைசேர்குழலாள்கயலேர்தடங்கண்ணிகாம்பனதோட்கதிர்மென்
தேசுசேர்மலைமாதமருந்திருமார்பகலத் [முலைத்
தீசன்மேவுமிருங்கயிலையெடுத்தானையன்றடர்த்தானிணைச்சேவடி
பூசைசெய்பவர்சேர்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (அ)

கொங்குசேர்குழலாணிழல் வெண்ணகைக்கோவ்வைவாய்க்கொடியேரிடையாளுமை, பங்குசேர்திருமார்புடையார்படர்தீயுருவாய், மங்குல்வண்ணனுமாமலரோனு மயங்கநீண்டவர்வான்மிசைவந்தெழு, பொங்குநீரின்மிதந்தநற்பூந்தராய்போற்றுதுமே. (௯)

கலவமாமயிலாரியலாள்கரும்பன்னமென்மொழியாள்கதிர்வாணுதற்
குலவுபூங்குழலாளுமைகூறனைவேறுரையா [நற்
லலவைசொல்லுவார்தேரம ணாதர்களாக்கினான்றனைநண்ணலுநல்கு
புலவர்தாம்புகழ்பொற்பதிபூந்தராய்போற்றுதுமே. (௧௦)

தேம்பனுண்ணிடையாள்செழுஞ் சேலனகண்ணியோடண்ணல்சேர்விடந்தேனமர், பூம்பொழிறிகழ்பொற்பதிபூந்தராய்போற்றுதுமென், றோம்புதன்மையன்முத்தமிழ்நான்மறைஞானசம்பந்தனெண்டமிழ்மாலைகொண், டாம்படியிவையேத்தவல்லார்க்கடையாவினையே.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்

ஸ்ரீ கயிலாயம்.

திருத்தாண்டகம்.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றி
மீளாமேயாளென்னைக்கொண்டாய்போற்றி
யூற்றாகியுள்ளேயொளித்தாய்போற்றி
யோவாதசத்தத்தொலியேபோற்றி
யாற்றாகியங்கேயமர்ந்தாய்போற்றி
யாறங்கநால்வேதமானாய்போற்றி
காற்றாகியெங்குங்கலந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௧)

பிச்சாடல்பேயோடுகந்தாய்போற்றி
பிறவியறுக்கும்பிரானேபோற்றி
வைச்சாடனன்றுமுகந்தாய்போற்றி
மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி
பொய்ச்சார்புரமூன்றுமெய்தாய்போற்றி
போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கச்சாகநாகமசைத்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (உ)

மருவார்புரமூன்று மெய்தாய்போற்றி
மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி
யுருவாகியென்னைப்படைத்தாய்போற்றி
யுள்ளாவிவாங்கியொளித்தாய்போற்றி
திருவாகிநின்றதிறமேபோற்றி
தேசம்பரவப்படுவாய்போற்றி
கருவாகியோடுமுகிலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௩)

வானத்தார்போற்றுமருந்தேபோற்றி
வந்தென்றன்சிந்தைபுகுந்தாய்போற்றி
யூனத்தைநீக்குமுடலேபோற்றி
யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
தேனத்தைவார்த்ததெளிவேபோற்றி
தேவர்க்குந்தேவனாய்நின்றாய்போற்றி
கானத்தீயாடலுகந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௪)

ஊராகிநின்றவுலகேபோற்றி
யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
பேராகியெங்கும்பரந்தாய்போற்றி
பேராதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
நீராவியானநிழலேபோற்றி
நேர்வாரொருவரையுமில்லாய்போற்றி
காராகிநின்றமுகிலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௫)

சில்லுருவாய்ச்சென்றுதிரண்டாய்போற்றி
தேவரறியாததேவேபோற்றி
புல்லுயிர்க்கும்பூட்சிபுணர்த்தாய்போற்றி
போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி

பல்லுயிராய்ப்பார்தோறுநின்ருய்போற்றி
பற்றியுலகைவிடாதாய்போற்றி
கல்லுயிராய்நின்றகனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (சு)

பண்ணினிசையாகிநின்ருய்போற்றி
பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ்சொல்லானுய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயானுய்போற்றி
மேலவர்க்குமேலாகிநின்ருய்போற்றி
கண்ணின்மணியாகிநின்ருய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (எ)

இமையாதுயிராதிருந்தாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
யுமைபாகமாகத்தணைத்தாய்போற்றி
யூழியேழானவொருவாபோற்றி
யமையாவருநஞ்சமார்ந்தாய்போற்றி
யாதிபுராணனுய்நின்ருய்போற்றி
கமையாகிநின்றகனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (அ)

மூவாய்பிறவாயிறவாய்போற்றி
முன்னமேதோன்றிமுளைத்தாய்போற்றி
தேவாதிதேவர்கொழுந்தேபோற்றி
சென்றேறியெங்கும்பரந்தாய்போற்றி
யாவாவடியேனுக்கெல்லாம்போற்றி
யல்லனலியவலந்தேன்போற்றி
காவாய்கனகத்திரளேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (கூ)

நெடியவிசும்பொடுகண்ணேபோற்றி
நீளவகலமுடையாய்போற்றி
யடியுமுடியுமிகலிப்போற்றி
யங்கொன்றறியாமைநின்ருய்போற்றி
கொடியவன்கூற்றமுதைத்தாய்போற்றி
கோயிலாவென்சிந்தைகொண்டாய்போற்றி
கடியவுருமொடுமின்னேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௧0)

உண்ணாதுறங்கா திருந்தாய்போற்றி
யோதாதேவேதமுணர்ந்தாய்போற்றி
யெண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றி
யிறைவிரலால்வைத்துகந்தவீசாபோற்றி
பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போற்றி
பண்டேயென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கண்ணாயுலகுக்குநின்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

திருக்கழுக்குன்றம்.

பண் நட்டபாடை.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவவினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்
கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (௧)

இறங்கிச்சென்றுதொழுமினின்னிசைபாடியே
பிறங்குகொன்றைச்சடையனெங்கள்பிரானிட
நிறங்கள்செய்தமணிகணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித்தண்கழுக்குன்றமே. (௨)

நீளநின்றுதொழுமினித்தலுநீதியா
லாளுநம்மவினைகளல்கியழிந்திடத்
தோளுமெட்டுமுடையமாமணிச்சோதியான்
காளகண்டனுறையுந்தண்கழுக்குன்றமே. (௩)

வெளிறுதீரத்தொழுமின்வெண்பொடியாடியை
முளிறிலங்குமழுவாளன்முந்தியுறைவிடம்
பிளிறுதீரப்பெருங்கைப்பெய்மதமூன்றுடைக்
களிறினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (௪)

புலைகடீரத்தொழுமின்புன்சடைப்புண்ணிய
னிலைகொள்சூலப்படையனெந்தைபிரானிட

முலைகளுண்டுதழுவிக்குட்டியொடுமுசுக்
கலைகள்பாயும்புறவிற்றண்கழுக்குன்றமே. (௫)

மடமுடையவடியார்தம்மனத்தேயுற
விடமுடையமிடறன்விண்ணவர்மேலவன்
படமுடையவரவன்றான்பயிலுமிடங்
கடமுடையபுறவிற்றண்கழுக்குன்றமே. (௬)

ஊனமில்லாவடியார்தம்மனத்தேயுற
ஞானமூர்த்திநட்டமாடிநவிலுமிடந்
தேனும்வண்டுமதுவுண்டின்னிசைபாடியே
கானமஞ்ஞையுறையுந்தண்கழுக்குன்றமே. (௭)

அந்தமில்லாவடியார்தம்மனத்தேயுற
வந்துநாளும்வணங்கிமாலொடுநான்முகன்
சிந்தைசெய்தமலர்கணித்தலுஞ்சேரவே
சந்தநாறும்புறவிற்றண்கழுக்குன்றமே. (௮)

பிழைகடீரத்தொழுமின்பின்சடைப்பிஞ்ஞகன்
குழைகொள்காதன்குழகன்றானுறையும்மிட
மழைகள்சாலக்கலித்துநீடுயர்வேயவை
குழைகொண்முத்தஞ்சொரியுந்தண்கழுக்குன்றமே. (௯)

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடங்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளூரன்வனப்பினாற்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

கோளறு திருப்பதிகம்.

பண் பியந்தைக்காந்தாரம்.

அடிமை.

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்
மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனன்

ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளி
சனிபாம்பிரண்டுமுடனே
யாசறுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௧)

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்க
வெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனு
லொன்பதொடொன்றொடேழுபதினெட்டொடாறு
முடனாயநாள்களவைதா
மன்பொடுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௨)

உருவளர்பவளமேனியொளிநீறணிந்து
வுமையோடும்வெள்ளைவிடைமேன்
முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனுற்
றிருமகள்கலையதூர்திசயமாதுபூமி
திசைதெய்வமானபலவு
மருநெதிநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௩)

மதிநுதன்மங்கையோடுவடபாலிருந்து
மறையோதுமெங்கள்பரம
னதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனுற்
கொதியுறுகாலனங்கிநமனோடுதூதர்
கொடுநோய்களானபலவு
மதிகுணநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௪)

நஞ்சணிகண்டனெந்தைமடவாடனோடு
விடையேறுநங்கள்பரமன்
றுஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனல்
வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னு
மிகையானபூதமவையு
மஞ்சிடுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௫)

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்
மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனாற்
கோளரியுழுவையோடுகொலையானைகேழல்
கொடுநாகமோடுகரடி
யாளரிநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௬)

செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாக
விடையேறுசெல்வனடைவா
ரொப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும்வாதமிகையானபித்தும்
வினையானவந்துநலியா
வப்படிநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௭)

வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்து
மடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனா
லேழ்கடல்சூழிலங்கையரையன்றனோடு
மிடரானவந்துநலியா
வாழ்கடனல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௮)

பலபலவேடமாகும்பரனாரிபாகன்
பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனான்
மலர்மிசையோனுமாலுமறையோடுதேவர்
வருகாலமானபலவு
மலைகடன்மேருநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௯)

கொத்தலர்குழலியோடுவிசயற்குநல்கு
குணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாகமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனாற்

புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ண
றிருநீறுசெம்மைதிடமே
யத்தகுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௧௦)

தேனமர்பொழில்கொளாலைவிளைசெங்நெறுன்னி
வளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனாதியாயபிரமாபுரத்து
மறைஞானஞானமுனிவன்
றானுறுகோளுநாளுமடியாரைவந்து
நலியாதவண்ணமுரைசெய்
யானசொன்மாலையோதுமடியார்கள்வானி
லரசாள்வராணைநமதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்

திருவாரூர்த்திருவிருத்தம்.

பண் கொல்லி.

அ டி மை.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொலோ
வலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்றிருமூலட்டானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (௧)

மற்றிடமின்றிமனைதுறந்தல்லுணாவல்லமணர்
சொற்றிடமென்றுதுரிசுபட்டேனுக்குமுண்டுகொலோ
விற்றிடம்வாங்கிவிசயனொடன்றொருவேடுவனாய்ப் [மே.
புற்றிடங்கொண்டான்றன் றொண்டர்க்குத்தொண்டராம் புண்ணிய

ஒருவடிவின்றிநின்றுண்குண்டர்முன்னமக்குண்டுகொலோ
செருவடிவெஞ்சிலையாற்புரமட்டவன்சென்றடையாத்
திருவுடையான்றிருவாரூர்த்திருமூலட்டானன்செங்கட்
பொருவிடையானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

மாசினையேறியமேனியர்வன்கண்ணர்மொண்ணரைவிட்
டீசனையேநினைந்தேசறுவேனுக்குமுண்டுகொலோ
தேசனையாரூர்த்திருமூலட்டானனைச்சிந்தைசெய்து
பூசனைப்பூசுரர்தொண்டர்க்குத்தொண்டாம்புண்ணியமே. (௬)

அருந்தும்பொழுதுரையாடாவமணர்திறமகன்று
வருந்திநினைந்தரனேயென்றுவாழ்த்துவேற்குண்டுகொலோ
திருந்தியமாமதிலாரூர்த்திருமூலட்டானனுக்குப்
பொருந்துந்தவமுடைத்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

வீங்கியதோள்களுந்தாள்களுமாய்நின்றுவெற்றரையே
மூங்கைகள்போலுண்ணுமூடர்முன்னேநமக்குண்டுகொலோ
தேங்கமழ்சோலைத்தென்னாரூர்த்திருமூலட்டானன்செய்ய
பூங்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (௮)

பண்ணியசாத்திரப்பேய்கள்பறிதலைக்குண்டரைவிட்
டெண்ணில்புகழீசன்றன்னருள்பெற்றேற்குமுண்டுகொலோ
திண்ணியமாமதிலாரூர்த்திருமூலட்டானனெங்கள்
புண்ணியன்றன்னடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.()

கரப்பர்கண்மெய்யைத்தலைபறிக்கச்சுகமென்னுங்குண்ட
ருரைப்பனகேளாதிங்குய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
திருப்பொலியாரூர்த்திருமூலட்டானன்றிருக்கயிலைப்
பொருப்பன்விருப்பமர்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

கையிலிடுசோறுநின்றுண்ணுங்காதலமணரைவிட்
டுய்யுநெறிகண்டிங்குய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
வையமனிவயலாரூர்த்திருமூலட்டானனுக்குப்
பொய்யன்பிலாவடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.()

குற்றமுடையவமணர்திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
மற்பொலிதோளானிராவணன்றன்வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.(௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனுர்

திருத்தொண்டத்தொகை.

பண் கொல்லிக்கௌவாணம்.

அடிமை.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனுர்க் கடியே
னில்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியே
னல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (௧)

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே
னேஞதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியே
னலைமலிந்த புனன்மங்கை யானயற் கடியே
ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (௨)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினு லெறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (௩)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியே

ளொருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
  னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியே
னருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
  னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௪)

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
  மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
  னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியே
னம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியே
  னாட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியே
னம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
  னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௫)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
  மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
  செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
  கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியே
னார்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
  னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௬)

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
  பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
  விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
  கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியே
னையடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
  னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௭)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
  கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியே
னிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
  நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
றுறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
  தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியே
னறைக்கொண்ட வேனம்பி முனையடுவாற் கடியே
  னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௮)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியே
னடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (கூ)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
றிருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியே
னப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (க0)

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கு நேசனுக்கு மடியேன்
றென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

அகத்தியமகாமுனிவர் திரட்டியருளிய

தேவாரத்திரட்டு முற்றுப்பெற்றது.

அத்தியர்தேவாரத்திரட்டுப்

பாட்டுமுதற்குறிப்பகராதி.

முற்றிற்று.
